B - இரசம் திரவ நிலையில் உள்ள உலோகமாகும்.

1) A உம் B உம் சரி 2) A உம் B உம் பிழை 3) A சரி B பிழை

10.



இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1) 8

2) 12

3) 14

11. பெட்டியொன்றில் 8 சவர்க்காரக் கட்டிகளை அடுக்க முடியும். அதன்படி, 77 சவர்க்காரக் கட்டிகளை அடுக்குவதற்கு எத்தனை பெட்டிகள் தேவைப்படும்?

1) 9 2) 10 3) 11

12. சமன், திங்கட்கிழமையை விட ரூபா 10.00 அதிகமாக செவ்வாய்க்கிழமையும், செவ்வாய்க்கிழமையை விட ரூபா 10.000 அிகமாக புதன்கிழமையும் செலவழித்தான். அவன் செவ்வாய்க்கிழமை செலவழித்த மொத்தப் பணம் ரூபா 60.00 எனின், அவன் மூன்று நாட்களும் செலவழித்த மொத்தப் பணம் எவ்வளவு?

1) ரூபா 180.00 2) ரூபா 170.00 3) ரூபா 190.00


13. 2020ம் ஆண்டு ஜனவரி 01ம் திகதி புதன்கிழமை எனின், 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் 01ம் திகதி என்ன கிழமை?

1) வெள்ளிக்கிழமை 2) சனிக்கிழமை 3) ஞாயிற்றுக்கிழமை


www.lkedu.lk

14. முக்கோணம், சதுரம், வட்டம் ஆகிய மூன்று வடிவங்களுக்கும் உரிய ஆங்கில எழுத்து?

1) D
2) C
3) E



15.



சிவப்பு நிற மாபிள் ஒன்றை வெளியே எடுக்க வேண்டும் எனின், எத்தனை மாபிள்கள்களை வெளியே எடுக்க வேண்டும்?

1) 05 2) 06 3) 07

16. பீங்கான் ஒன்றிலுள்ள இனிப்புப் பண்டங்கள் முறையே லட்டு, அப்பம், பலகாரம், முறுக்கு முறையே ஆகும். எனின் 52 ஆவதாக வரும் இனிப்பு வகை எது?

1) பலகாரம் 2) முறுக்கு 3) லட்டு

17. இரகசிய குறியீட்டால் குறிப்பிடப்பட்டிருக்கும் இதன் சரியான விடை எதுவாக இருக்கும்?

A A B D A E

1) 446541 2) 773643 3) 997973

18. $220 - 225$ வரையான இலக்கங்களை எழுதும் போது இலக்கம் 2 எழுதப்படும் எண்ணிக்கை யாது ?


1) 12 2) 14 3) 13


19. ஒரு குளிர்பானப் போத்தல் 5 பேரை உபசரிக்க போதுமானது எனின், 27 பேரை உபசிரக்கத் தேவையான குளிர்பானப் போத்தல்கள் எத்தனை?


1) 05 2) 06 3) 07

20. கீழே தரப்பட்டுள்ள பொருட்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் கொள்ளலாம்


A


B


C



D

அவ்விரு பிரிவுகளும் முறையாகப் பிரிக்கப்பட்டுள்ள விதம்

1) **AD, BC** 2) **AB, CD** 3) **AC, BD**

www.lkedu.lk

21. கீழே காட்டப்பட்டிருக்கும் விலங்கினங்களை மூன்று தொகுதிகளாகப் பிரிக்கலம்




A **B** **C** **D** **E** **F**

அம் மூன்று தொகுதிகளுமாவன

1) **AB, CD, EF** 2) **AE, BF, CD** 3) **AC, BF, BE**

22. பின்வரும் கார்ட்போட் துண்டுகளில் எண்கள் எழுதப்பட்டுள்ளது. ஒரு கோலத்திற்கேற்பவாகும். அதன்படி வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.



1) 12 2) 18 3) 16

23. பிள்ளையொன்று பாய்ந்து சென்ற ஒழுங்குமுறை $1, 3, 6, 10, \ldots\ldots$ என்ற வகையில் காட்டப்பட்டுள்ளது எனில், 5 வது பாச்சலில் பாயும் போது எந்த இலக்கத்தில் நிற்கும்?

1) 19 2) 20 3) 21

- **கடல் என்பது KDL எனவும் கரம் என்பது KRM எனவும் குறிக்கப்படின்,**


24. கடகம் என்பதை சரியாகக் குறிக்கப் பயன்படும் எழுத்துக்கூட்டம் எது?

1) KLSM 2) KDKM 3) KRUM


25. VDKM என்று குறித்து நிற்கும் சொல்?

1) கடகம் 2) வடகம் 3) கரகம்

- **பின்வரும் தகவல்களை நன்கு பரிசீலிக்குக.**



ரூபா 40.00



ரூபா 60.00

26. மேலே தகவல்களின்படி பேனையொன்றின் விலை?


1) ரூபா 30.00 2) ரூபா 15.00 3) ரூபா 10.00


www.lkedu.lk


27. கமல், மேல் மாகாணத்தின் களுத்துறை மாவட்டத்தில் ரயகம கிராம சேவை பிரிவில் வெலிகம என்னும் ஊரில் பிறந்தார். அவை பின்வருமாறு அடையாளமிடப்பட்டுள்ளன.

● **ஊர்** ○ **மாகாணம்** △ **கிராம சேவை பிரிவு** □ **மாவட்டம்**


கமலின் ஊரினை சரியாகக் காட்டு உரு எது ?

1) 

2) 

3) 

28. மூன்று மனிதர்கள் 10 நாட்களில் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டிருந்த வேலை ஒன்றை 5 மனிதர்கள் எத்தனை நாட்களில் செய்து முடிப்பர்?
1) 5 நாட்கள் 2) 6 நாட்களில் 3) 8 நாட்களில்


29. 


இச்சதுரமுகியில் A பக்கம் காட்டப்படும் தோற்றம்
1) கிடைப்பக்கம் / திட்டம்
2) பக்கத்தோற்றம்
3) முன்பக்கத்தோற்றம்


30. 10 முட்டைகள் அவிய 10 நிமிடம் தேவை எனின், ஒரு முட்டை அவிய தேவையான நேரம் யாது?
1) 10 நிமிடம் 2) 20 நிமிடம் 3) 100 நிமிடம்

31. சுகுனா வரிசையொன்றில் தனக்கு முன் 11 பேர் நின்றனர் என்றும் பின்னால் இருந்து தான் 13ஆவதாக நின்றேன் எனவும் கூறினாள். ஏனின், அவ் வரிசையில் எத்தனை பேர் நின்றனர்?
1) 25 2) 24 3) 23


- **வெற்றிடத்திற்குப் பொருத்தமான பெறுமானத்தை தெரிவு செய்க.**


32. 






1) 42 2) 39 3) 46

33. 





1) 40 2) 50 3) 36


www.lkedu.lk

34. ஆலயமொன்றில் நிகழ்சிகளுக்காக ஒதுக்கப்பட்ட வட்டவடிவான இடத்தில் 32 வெள்ளை மின்குமிழ்கள் இணைக்கப்பட்டன. அவற்றுக்கிடையே சிவப்பு, பச்சை, மஞ்சள் மின்குமிழ்கள் மூன்றும் இணைக்கப்பட்டிருந்தன எனின், அங்கு இணைக்கப்பட்டிருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கை யாது?


1) 96 2) 128 3) 124

- **நான்காக மடிக்கப்பட்டு வெட்டப்பட்டுள்ள படம் முன்னே தரப்பட்டுள்ளது. அது வெட்டப்பட்ட பின்னர் மடிப்பை நீக்கினால் வரும் முழு உருவைத் தெரிவு செய்து இலக்கத்தின் கீழ் கோடிடுக.**

35.



36.



37. நெடுஞ்சாலை ஒன்றில் 65 மின்கம்பங்கள் உள்ளன. அவற்றுக்கிடையே ஒவ்வொரு தொலைபேசி கம்பங்களும் உள்ளன. அவ்வீதியில் காணப்பட்ட தொலைபேசிக் கம்பங்களின் எண்ணிக்கை யாது?

1) 64 2) 66 3) 65

- **நாட்காட்டியை அவதானித்து விடை தருக?**

(2020 ஜனவரி மாதம்)

தி	செ	பு	வி	வெ	ச	ஞா
31		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	27	28	29	30

38. இம்மாதத்தின் நடுநாள்?

1) புதன் 2) வியாழன் 3) ஞாயிறு

39. இம்மாதத்தின் இறுதி நாள்?

1) சனி 2) புதன் 3) திங்கள்

40. புதன் கிழமைகளின் கூட்டுத்தொகை யாது?

1) 75 2) 80 3) 88

www.lkedu.lk

செய்கை வேலைக்கான பகுதி

www.lkedu.lk

- பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.

வண்ணத்துப்பூச்சி கூறத்தொடங்கியது. நாங்கள் பூக்களில் உள்ள தேனைக் குடிப்பவர்கள். எங்கள் குடும்பம் மிகவும் பெரியது. அழகிய நந்தவனமே எங்கள் இருப்பிடம். நீண்ட நாட்களாக நாங்கள் ஒற்றுமையாக அந்த நந்தவனத்தில் வசித்து வந்தோம். வண்ண வண்ணப் பூக்களில் மணமும் எமது அழகும் காண்போரைப் பரவசப்படுத்தும். அண்மையில், நாங்கள் குடியிருந்த நந்தவனம் சில மனிதர்களால் அழிக்கப்பட்டது. இதனால் எமது உறவினர்கள் வெவ்வேறு திசைகளை நோக்கிப் பிரிந்து சென்றுவிட்டனர்.

i) தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல்? .....

ii) கீழ்க்காலும் சுழியும் கொண்ட சொல்? .....

iii) எழில் என்பதன் ஒத்த சொல்? .....

iv) அருகில் என்பதன் ஒத்த சொல்? .....

v) காலப் பெயர்ச் சொல்? .....

vi) வண்ணத்துப் பூச்சியின் பிரதான உணவு எது? .....

vii) தோட்டம் என்பதன் ஒத்த சொல்? .....

viii) வேற்றுமையாக என்பதன் எதிர்க்கருத்து? .....

ix) காண்போரை பரவசப்படுத்துவது எது? .....

x) அடுக்குமொழிச் சொல்? .....

xi) இடப் பெயர்ச் சொல்? .....

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.

i) கைப் புண்ணுக்கு ..... (கண்ணாடி, கன்னாடி) வேண்டுமா?

ii) உள்ளங்கை நெல்லிக் ..... (கனி, கணி) போல

iii) காலையில் சூரிய ..... (ஒளி, ஒலி) பிரகாசித்தது.

iv) நாம் சுவாசிக்கும் ..... (வளி, வலி) மாசடையாது பாதுகாப்போம்.

v) தோமஸ் அல்வா எடிசன் .....யில் ஈடுபட்டார். (ஆராச்சி, ஆராய்ச்சி)

03. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i) நாட்டிற்கு விரோதமாக நடத்தல் : .....

ii) பொருள் ஒன்றுடன் வேறு ஒரு பொருளைக் கலந்து விடுதல் : .....

iii) கல்வித் துறையில் பல மேற்படிப்புப் பயிலும் இடம் : .....

iv) வழக்கை தாக்கல் செய்பவன் : .....

v) தாய் தந்தையை இழந்தவன் : .....

(வாதி, பல்கலைக்கழகம், அநாதை, தேசத்துரோகம், கலப்படம்)

www.lkedu.lk

03. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை அடைப்புகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


i) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் இவை ஐந்தும் ..... (ஐம்பொறி, ஐம்புலன்) ஆகும்.

ii) பொன் விழா என்பது (75, 50, 60) .....வது ஆண்டு இறுதியில் எடுக்கப்படும் விழா ஆகும்.

iii) ஒரு தண்டிலே பல மலர்கள் மலர்ந்துள்ள பூங்கொத்து ..... (பூஞ்சோலை, மஞ்சரி) ஆகும்.

05. ஒவ்வொரு படத்துக்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i)  .....

ii)  .....

06. பின்வரும் சொற்களின் கருத்தினை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i) தொலைபேசி : .....

ii) மீன் : .....

07. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

i) வேகமாக ஓடுங்கள் : .....

ii) இன்று சனிக்கிழமை : .....

08. கீழ்வரும் சொற்களை ஆராய்ந்து வினாக்களுக்கு விடை தருக.

நூலகம், பூக்கள், மீன், கொக்கு, கோழி

i) விசிறியும் சுழியும் கொண்டமைந்த ஒரு சொல் எது? .....

ii) மடக்கேறும் அரவும் கொண்டமைந்த சொல் எது? .....

iii) கீழ்க்காலும் சுழியும் கொண்ட சொல் எது? .....

iv) இரட்டைக் கொம்பும் அரவும் கொண்ட சொல் எது? .....

v) ஒற்றைக் கொம்பும் அரவும் கொண்ட சொல் எது? .....

www.lkedu.lk

09. பின்வரும் ஒவ்வொரு பழமொழியினதும் மீதிப் பகுதியைப் பூரணப்படுத்துக.

i) அகத்தின் அழகு .....

ii) கடுகு சிறிதாயினும் .....

iii) அடம்பன் கொடியும் .....

10. பின்வரும் ஒவ்வொரு பாடலினதும் நான்காவது வரியைப் பூரணப்படுத்துக.

i) பாதையில் நாமும் போகையிலே
பார்த்துக் கவனமாய்ச் சென்றிடுவோம்
வீதியொழுங்கைப் பேணி நிதம்

.....

ii) கவனம் எங்கும் சிதறாமல்
பாதையில் வலப்புறம் நடந்திடுவோம்
வெள்ளைக் கோட்டைக் கவனிப்போம்

.....

11. **"சூழலைச் சுத்தமாக வைத்திருப்போம்"** என்ற தலைப்பில் சரியான எழுவாய் பயனிலை புலப்படும் வகையில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாதவாறு அமைத்தல் வேண்டும். (எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது)

1. .....
.....
2. .....
.....
3. .....
.....

01. பின்வரும் கணிதச் செய்கைகளுக்கான விடையை புள்ளிக் கோட்டில் எழுதுக.

1) சொற்களில் எழுதுக.
2403 : .....


2) இலக்கங்களில் எழுதுக.
மூவாயிரத்து இருபத்தேழு : .....

3) கனவுரு ஒன்றிலுள்ள,
i) உச்சிகளின் எண்ணிக்கை யாது?

.....

ii) முகங்கள், விளிம்புகளின் எண்ணிக்கையின் கூட்டுத்தொகை யாது?


....



www.lkedu.lk

4) XI + IX இன் பெறுமதியை உரோமன் இலக்கத்தில் எழுதுக ? .....

5)



A B


B பாத்திரத்தைவிட A பாத்திரத்தில் உவ்வளவு நீர் அதிகம்?

.....

6) தரப்பட்ட உருக்களினுள்ளே உத்தனை செங்கோணங்கள் உள்ளன என எழுதுக.




.....



.....


7) கடிகார முகங்கள் காட்டும் நேரங்களை எழுதுக

(i)



..... மணி

(ii)



..... மணி


8) எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் எழுதுக.
2025, 2000, 1975, 1950, ... , ...

9) இவ்நான்கு இலக்கங்களையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச்சிறிய இலக்கம் யாது ?

.....

9	0
4	1

10)



i) தரப்பட்டுள்ள உருவில் $\frac{4}{10}$ பங்கை நிழற்றுக.

ii) அதில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைப் பின்னமாகத் தருக.

.....

www.lkedu.lk

11) நிமலின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 2Km 800m. அவன் 900m தூரத்தை நடந்தும் மிகுதித் தூரத்தை பேருந்திலும் வருவான். அவன் பேருந்தில் பயணம் செய்த தூரம் யாது ?

.....

12) குவியல் ஒன்றில் 336 அன்னாசிப் பழங்கள் உள்ளன. அவை 3 பெட்டிகளில் சமனாக அடுக்கப்பட்டன. ஒரு பெட்டியில் இருக்கும் அன்னாசிப் பழங்கள் எத்தனை ?


.....

13) கடிகார முட்கள் அமைந்திருக்கும் கோணம் யாது ?

.....



14) கீழே விரித்து வைக்கப்பட்ட தளவுரு ஒன்று தரப்பட்டுள்ளது.



i) இதனை மூடிப் பெறப்படும் தளவுருவின் பெயரை எழுதுக ?

.....


ii) இதனை மூடுவதன் மூலம் பெறப்படும் தளவுருவின் விளிம்புகள் எத்தனை ?

.....

www.ikedu.lk

15) ஒரு குறித்த பாடசாலையின் பிள்ளைகளிடம் அவர்கள் மிகவும் விரும்பும் விளையாட்டுக்கள் பற்றி வினவப்பட்டது. அதன் மூலம் பெறப்பட்ட தகவல்களை கீழே காணலாம்.

விளையாட்டு	எண்ணிக்கை
எல்லே	60
ரகர்	.....
கரப்பந்து	75
கூடைப்பந்து	80



i) வரைபில் உள்ள தகவலுக்கேற்ப அட்டவணையில் இருக்கும் வெற்றிடத்தை நிரப்புக.

ii) அட்டவணையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப வரைபைப் பூரணப்படுத்துக.

01. பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ் கோடிடுக.

1. இலங்கைக்குரிய தாவரம்?
   1) தென்னை 2) தேயிலை 3) வாழை 4) எண்ணை

2. காற்றின் மூலம் பரவும் வித்து அல்லாதது?
   1) இலவம் 2) தாமரை 3) எருக்கலை 3) தணக்கு

3. பின்வருவனவற்றுள் நீல நிறப் பூ?
   1) காக்கணம் பூ 2) அந்தூரியம் 3) பாகல் 4) அவரை

4. யானைக்கால் நோயை உண்டுபண்ணும் நுளம்பு?
   1) ஈடிஸ் 2) அனோபிலஸ் 3) கியுலக்ஸ் 4) வீட்டு ஈ


5.  படத்தில் காட்டப்பட்டுள்ள பாதம் எப்பறவையினுடையது?
   1) காகம்
   2) மீன்கொத்தி
   3) மரங்கொத்தி
   4) தேன்சிட்டு

6. முட்டைகள் வெடித்து எது வெளிவருவது?
   1) குடம்பி 2) கூட்டுப்புழு 3) உடல் 4) முதிர் உரு

7. குப்பை கூளங்களில் பெருகும் பிராணி?
   1) தேனீ 2) வீட்டு ஈ 3) குளவி 4) கரப்பான்

8. காந்தம் கவரக்கூடிய பொருள் எது?
   1) பாதணி 2) குண்டூசி 3) கடதாசி 4) அழிப்பான்

www.lkedu.lk


9. 

இவ்வுபகரணம் பயன்படுத்தப்படுவது?
1) தச்சுத் தொழிலில்
2) நெசவுத் தொழிலில்
3) விவசாயத் தொழிலில்
4) மட்பாண்டத் தொழிலில்

10. பின்வருவனவற்றுள் ஒரு அணில் ஒருவர் மாத்திரம் பங்குபெறும் விளையாட்டு எது?
1) சதுரங்கம் 2) எல்லே 3) ஈட்டி எறியதல் 4) கபடி

11. உடலில் புல்லெண்ணெய்யை தேய்த்துக் கொள்ளல், துளசி இலைகளை எரித்துப் புகையூட்டல் போன்ற செயற்பாடுகளைச் செய்வது எந்தப் பிராணியின் தொல்லைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகும்?
1) நுளம்பு 2) ஈ 3) நாய் 4) எலி

12. நிலத்தில் விழும் கழிவுப் பொருட்களை சின்னஞ் சிறு துண்டுகளாக்கி உக்குவதற்கு உதவுவது?
1) மண்புழு, கறையான் 2) காகம், கோழி
3) எலி, பாம்பு 4) நாய், பூனை

13. அழுக்குகளை உண்டு சூழலை சுத்தப்படுத்தும் பறவை
1)  2)  3)  4) 

14. பாரமான பொருட்களை ஏற்றவும் / இறக்கவும் உதவும் பிராணி?
1) யானை 2) குதிரை 3) கஸ்தூரிமான் 4) மரை

15. எந்த விலங்கிலிருந்து வாசனைத் திரவியத்தைப் பெற்றுக் கொள்ளலாம் ?
1) கஸ்தூரிமான் 2) யானை 3) மரை 4) புலி

16. பின்வரும் எந்தப் பிராணியின் அழகினால் சூழல் அழகு பெறும் ?
1) வண்ணத்துப்பூச்சி 2) குளவிகள் 3) வெட்டுக்கிளி 4) வண்டு

17. மனிதரையும் மனிதருடைய பொருட்களையும் இடத்திற்கு இடம் கொண்டு செல்லப் பயன்படுத்திய விலங்கு
1) ஒட்டகச்சிவிங்கி 2) எருது 3) வரிக்குதிரை 4) யானை

18. விவசாய நடவடிக்கைகளுக்கு உதவும் விலங்கு
1) குதிரை 2) கழுதை 3) ஒட்டகம் 4) எருது

19. பின்வரும் எத்தாவரம் அளவுக்கு அதிகமாக காணப்படுமானால் அது சூழலின் சமநிலையைப் பாதிக்கும் ?
1) மூக்குத்திப்பூண்டு 2) ஆனைவணங்கி 3) நாயுருவி 4) நாய்வாலி

www.lkedu.lk

20. 

இப்போக்குவரத்துப் பொலிசாரின் சைகை குறித்து நிற்பது


1) முன்னே வாருங்கள்
2) பின்னால் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்
3) முன்னால் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்
4) நிறுத்துங்கள்

21. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை
1) பாக்கு நீரிணை 2) மன்னார் நீரிணை
3) மகாவலி கங்கை 4) அயேஸ் நீரிணை

22. தேசப்படங்களில் குளம், ஆறு, கடல் போன்றவற்றைக் குறித்துக்காட்ட பயன்படும் நியம நிறம் எது ?
1) பச்சை 2) கறுப்பு 3) நீலம் 4) சிவப்பு

23. யானைகள் சரணாலயம் அமைந்துள்ள இடம் ?
1) தெஹஸவளை 2) குமண 3) பின்னவல 4) யால

24. கிழக்கு மாகாணத்தில் கடலுடன் கலக்கும் ஆறு
1) மகாவலிகங்கை 2) நில்வளகங்கை 3) களனி கங்கை 4) களு கங்கை

25. நாம் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தும் பாவனைப் பொருள் அல்லாதது
1)  2)  3)  4) 

26. உடற்பயிற்சி செய்வதற்கு மிகச் சிறந்த நேரம்
1) காலை 2) பகல் 3) மாலை 4) இரவு

27. இலங்கையின் தேசிய சின்னம் அல்லாதது
1) மகாவலி கங்கை 2) காட்டுக்கோழி 3) நீலோற்பலம் 4) நாகமரம்

28. யால,வில்பத்து ஆகிய இடங்கள் மிக பிரசித்தமானது
1) சரணாலயங்களினால் 2) பூஞ்சோலையினால்
3) வனங்களினால் 4) மலைகளினால்


29. பரிதி வட்டம் எறிதல் விளையாட்டைக் காட்டும் உரு
1)  2)  3)  4) 

30. 

நங்கூரம் பயன்படுத்தப்படுவது
1) தொடரூந்தை நிறுத்தி வைப்பதற்கு
2) பேருந்தை நிறுத்தி வைப்பதற்கு
3) கப்பலை நிறுத்தி வைப்பதற்கு
4) மகிழுந்தை நிறுத்தி வைப்பதற்கு

www.ikedu.lk

புலமை அறிவு



தரம் 5

2020 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 05

ஆசிரியர்

திரு. ந. மனோகரன் BA, Dip in Teach , SLTS II

(புலமை அறிவு வினாத்தாள் ஆசிரியர் -
(புலமைச் சுடர், மலைமுரசு, ஒளி அரசு புலமைப் பரிசில்,
கிழக்கு மாகாணம் - வினாத்தாள் ஆசிரியர்)

தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)




மாணவர் பெயர்

.....

புள்ளித்திட்டம்	
பகுதி I	
பகுதி II	
மொத்தம்	

- **01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள புதிர்ப் பாடல்களைக் குறிக்கும் உருவத்தைத் தெரிவு செய்க.**


01. சொன்னதைச் சொல்லும் பறவை
நான் சொண்டால், பழத்தை சுவைத்திடுவேன்
நான் யார்? நான் யார்?



1)



2)



3)

02. நீலம், பச்சை, மஞ்சள், செம்மை நிறமும்
மாறுது – செடி நிறத்திற்கேற்ப
வண்ணம் பல நிறமும் சேருது.



1)




2)



3)


- **03, 04 ஆம் வினாக்களில் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் வரவேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

03.




.....


1)




2)



3)




04.




.....


1)



2)




3)



www.lkedu.lk

- **பின்வரும் பாடலை நன்றாக வாசித்து சரியான விடையைத் தெரிவு செய்க.**


05)



உருவிலுள்ள சதுரங்கள் எத்தனை?

1) 04 2) 06 3) 10

06)




நிழற்றிய பகுதிக்கு பொருத்தமான விலங்கு

1. ஒட்டகம் 2. கிவி 3. தவளை


- **எண்கோலங்களை விளங்கி வினாக்குறி இடத்தில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்து கோடிடுக.**

07)




1) 6
2) 7
3) 8

08)



1) 6
2) 5
3) 9

- **சரியான விடையைத் தெரிவு செய்க.**



09) △ இன் பெறுமானம் யாது ?

1) 6 2) 7 3) 8

10) ▲ இன் பெறுமானம் யாது ?


1) 9 2) 7 3) 8

www.ikedu.lk

- **கீழுள்ள பாடலைக் கொண்டு விடையைத் தெரிவு செய்க.**

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

11) இப்பாடலின் பிரதான கருத்து
1) பணிகள் பல செய்ய வேண்டும்
2) மிகப்பெரிய தருமம் தந்தை தாயைப் பேணுதல்
3) உலகில் தருமம் செய்தல் சிறந்தது

12) 


இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின்எண்ணிக்கை யாது ?
1) 3
2) 4
3) 6

13) பின்வரும் எண்கோலங்களில் காணப்படுகின்ற இடைவெளியில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.


20	5	15
8	4	4
15		9

1) 3
2) 4
3) 6

- **உருவில் தரப்பட்ட விலைகளுக்கேற்ப விடையைத் தெரிக.**


ரூ 96.00


ரூ 210.00


ரூ 93.00

14) பந்து ஒன்றின் விலை யாது ?
1) ரூ 50.00 2) ரூ 48.00 3) ரூ 45.00

15) துடுப்பொன்றின் விலை யாது ?
1) ரூ 155.00 2) ரூ 165.00 3) ரூ 145.00


www.lkedu.lk

16) மூன்று பந்துகளையும் ஒரு தொப்பியும் வாங்கும் ஒருவர் வியாபாரிக்கு ரூ 500.00 ஐக் கொடுத்தால், அவருக்கு கிடைக்கும் மிகுதிப்பணம்
1) ரூ 248.00 2) ரூ 234.00 3) ரூ 311.00

17) யாருமற்ற மனிதனை இறைவனே காப்பாற்றுவான். இதற்குப் பொருத்தமான பழமொழி
1) திக்கற்றவனுக்கு தெய்வமே துணை
2) நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைத்தது.
3) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

18) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து எனும் பழமொழியின் கருத்து
1) இடைவிடாது முயற்சி செய்து கற்க வேண்டும்
2) இளமைக்கால பழக்கம் சிறந்தது.
3) இளமைக் காலத்தில் கல்வி கற்பது சிறந்தது.

- **தராசுகளில் காணப்படும் பொருட்களின் நிறைகளை அவதானித்து மிகச்சரியான விடைகளைத் தெரிவு செய்க.**



19) அன்னாசிப் பழத்தின் நிறை 750g எனின், பப்பாசிப் பழத்தின் நிறை எவ்வளவு ?
1) 750g 2) 250g 3) 1kg 250g

20) பொருட்களின் நிறைகளுக்கேற்ப அவற்றை ஏறுவரிசையில் எழுதினால் வரும் விடையைத் தெரிவு செய்க.
1) பப்பாசிப்பழம், பூசனிக்காய், அன்னாசி
2) பூசனிக்காய், அன்னாசி, பப்பாசிப்பழம்
3) பப்பாசிப்பழம், அன்னாசி, பூசனிக்காய்

21) நோயாளி ஒருவருக்கு 30 நிமிடங்களுக்கு ஒரு தடவை ஒன்று வீதம் உட்கொள்வதற்கு ஐந்து மருந்து வில்லைகள் வழங்கப்பட்டன. வில்லைகளை உட்கொள்ள நோயாளிக்கு எடுக்கும் மொத்த நேரம் யாது ?
1) 2 மணித்தியாலம்
2) 2 மணித்தியாலம் 30 நிமிடம்
3) 3 மணித்தியாலம்


22) பண்ணையொன்றிலிருந்து ஆடு, மாடு, கோழி ஆகிய பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை 24 ஆகும். பண்ணையில் இருந்த கோழிகளின் எண்ணிக்கை பின்வருவனவற்றுள் எது ?
1) 5 2) 7 3) 8


www.tkedu.lk

23) மீனவனுக்கு கடல் போன்று விளையாடுபவனுக்கு ……..
1) மைதானம் 2) பந்து 3) துடுப்பு

24) ஆசிரியருக்கு மாணவன் போன்று மருத்துவருக்கு ……..
1) பொதுமக்கள் 2) நோயாளி 3) தாதி


25) இவ்வுருவில் உள்ள செவ்வகங்கள் எத்தனை ?
1) 11
2) 10
3) 9



26) 

இம்முக்கோணியில் நிழற்றியுள்ள பகுதியை போல எத்தனை துண்டுகள் வெட்டி எடுக்கலாம் ?
1) 4
2) 6
3) 8

- **வரிப்படத்தினால் காட்டப்படும் தகவல்களைக் கொண்டு வினாக்களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**



27) வாசிப்பில் மட்டும் விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?
1) 7 பேர் 2) 3 பேர் 3) 8 பேர்

28) தொலைக்காட்சி பார்ப்பதில் மட்டும் விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?
1) 7 பேர் 2) 5 பேர் 3) 4 பேர்

29) தொலைக்காட்சி பார்த்தல், வாசிப்பு, விளையாட்டு ஆகிய மூன்றிற்குமே பொதுவாக விருப்பமுள்ளவர்கள் எத்தனை பேர் ?
1) 6 பேர் 2) 7 பேர் 3) 8 பேர்

30) சுமதியின் அண்ணன் பொது அறிவு வினாக்களுக்கு விடையளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். அவனை எவராலும் தோற்கடிக்க முடியாது. ஒரு நாள் சுமதியின் வீட்டிற்கு வந்த நண்பியின் தங்கை கேட்ட பொது அறிவுக் கேள்விக்கு சுமதியின் அண்ணனால் விடை கூற முடியவில்லை. இந் நிகழ்விற்குப் பொருத்தமான பழமொழி எது ?
1) நிறை குடம் தளம்பாது
2) ஆனைக்கும் அடிசறுக்கும்
3) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்


www.ikedu.lk

31) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இப்பழமொழிக்குப் பொருத்தமான கருத்து
1) விடாமுயற்சி பலன் தரும்.
2) பலசாலியும் தோல்வியடையலாம்
3) ஒற்றுமையே பலம்.

32) சரளா திறமையான மாணவியாக இருந்தாலும் இறுதித் தவணைப் பரீட்சையில் அவள் கணித பாடத்தில் குறைவாக புள்ளிகள் பெற்றாள். இதற்கு காரணம் எதுவாக இருக்கலாம் ?
1) கணித வினாத்தாள் கடினமாக இருந்ததால்.
2) உரிய கணித வினாக்களை எழுத நேரம் போதாமையால்
3) கணித வினாத்தாளை எழுத போதிய ஆயத்தமில்லாததால்

33) கமல், விமல் ஆகிய இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 26 வருடங்கள் ஆகும். அவர்களுக்கிடையே வயது வித்தியாசம் 4 வருடங்கள். ஆகவே இருவரது வயதுகளும் எத்தனை ?
1) கமல் 16, விமல் 16 2) கமல் 12, விமல் 14 3) கமல் 11, விமல் 15

- **கீழே தரப்பட்ட தரவுகளைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.**



34) இதற்கேற்ப மங்குஸ்தான் பழமொன்றின் விலை யாது ?
1) ரூபா 15.00 2) ரூ 20.00 3) ரூ 25.00

35) வாழைப்பழமொன்றின் விலை யாது ?
1) ரூ 25.00 2) ரூ 20.00 3) ரூ 15.00

- **கீழேயுள்ள சொற் கோலத்தை அவதானித்து புள்ளிக் கோடிடப்பட்ட இடத்தில் வரவேண்டிய சொல்லைத் தெரிவு செய்க.**

36) பதவி → வித்து → தம்பு → ……..
1) புத்தகம் 2) புடைவை 3) தும்பி

37) மதி → திக்கு → குடம்பி → ……..
1) பிறப்பு 2) பித்தப்பை 3) குடம்

38) சமுத்திரம் : நீர் எனின், பாலைவனம் : ..... ஆகும்.
1) வெயில் 2) மணல் 3) ஒட்டகம்

39) பழத்தில் சுவை போல பூவில் …….
1) இதழ் 2) மணம் 3) சுளை

40) நோய் : மருந்து எனின், பசி : ..... ஆகும்.
1) சோறு 2) உணவு 3) பழங்கள்

செய்கை வேலைக்கான பகுதி

www.lkedu.lk

01. பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.

அமைச்சரின் கூற்று துரியோதனனைச் சிந்திக்கத் தூண்டியது. எனவே துரியோதனன் அமைச்சரிடம் "நானும் கர்ணனைப்போல் புகழ்பெற யோசனை ஒன்று கூறுங்கள்" என்று கேட்டார். "மகா பிரபுவே! நாளை முதல் நாங்களும் கர்ணனைப்போல் கேட்பவர்க்கு இல்லை என்று கூறாது கொடுக்கத் தொடங்கிவிடுங்கள். உங்களுக்குக் 'கொடைவள்ளல்' என்ற புகழ் கிடைத்துவிடும்" என்று ஆலோசனை கூறினார் அமைச்சர்.

1. கொடை வள்ளல் யார்? .....
2. உவமைத் தொடரினை எழுதுக? .....
3. காலப் பெயர்ச் சொல்? .....
4. மன்னனைத் சிந்திக்க தூண்டியது எது? .....
5. இரப்போர்க்கு இல்லையென்னாது வாரி வழங்குபவன் யார்? .....
6. இகழ் என்பதன் எதிர்க்கருத்து? .....
7. புகழ் பெற யோசனை கேட்டவர் யார்? .....
8. முன்னிலை பன்மைச் பெயர்ச் சொல்? .....
9. மன்னனுக்கு ஆலோசனை கூறியவர் யார்? .....
10. தன்மை ஒருமைப் பெயர்ச் சொல்? .....

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.


1. அப்பா வந்ததும் அம்மா கதவைத் ..... (திரந்து / திறந்து) வரவேற்றார்.
2. விளையும் பயிரை ..... தெரியும் என்பது பழமொழியாகும். (முளையிலே / முலையிலே)
3. தசரத மன்னன் நீதி தவறாது ..... செய்தான். (ஆட்ச்சி / ஆட்சி)
4. நான் ..... வணங்கினேன். (கடவுலை / கடவுளை)
5. எங்கள் பாடசாலையின் வருடாந்த ..... விழா இடம்பெற்றது. (பரிசளிப்பு / பரிசலிப்பு)
6. உங்கள் பசு எங்கள் ..... முட்டியது. (காலையை / காளையை)


03. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

1. I am hungry : .....
2. How are you ? : .....

www.lkedu.lk

04. தரப்பட்ட படங்களுக்குரிய பெயரின் ஆங்கில உச்சரிப்பை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





....

05. சிங்கள வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.

1. කපුටා කලු පාටයි : .....
2. කිරි පොන්න : .....

06. எழுவாய்ச் சொல்லுக்குப் பொருத்தமான பயனிலைச் சொல்லைத் தெரிவு செய்க.

1. அவர்கள் நேற்றுப் பாடசாலைக்கு …….. (வரவில்லை / வருவார்கள்)
2. ரைட் சகோதரர்கள் புராதன காலத்தில் விமானத்தைக் கண்டு ……. (பிடிப்பார்கள் / பிடித்தார்கள்)
3. காகங்கள் அதிகாலையில் இரை தேடிப் …….. (பறந்தன / பறந்தது)
4. நேற்று சூரியன் கிழக்கில் …… (உதிக்கும் / உதித்தது)
5. கடந்த திங்கட்கிழமை அன்று பாடசாலையில் பரிசளிப்பு விழா …… (இடம்பெறும் / இடம்பெற்றது)

07. கீழ்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தரப்பட்ட சொற்களில் இருந்து தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.

(உதிர்ந்தன, விவசாயிகள், உண்டார்கள், கட்டில், நடந்தது, அப்பா)

1. அ.ஃறிணை, ஒன்றன்பால் ஒருமை இறந்தகால வினைச்சொல் எது ? .....
2. உயர்திணை, பலர்பால், பன்மைப் பெயர்ச்சொல் எது ? .....
3. அ.ஃறிணை ஒருமைப் பெயர்ச்சொல் எது ? .....
4. உயர்திணை ஆண்பால் பெயர்ச் சொல் ? .....
5. அ.ஃறிணை பன்மை இறந்தகால வினைச் சொல்? .....

www.lkedu.lk

07. சரியான விடையைத் தெரிவு செய்து கோடிடுக.

1. நண்பர்களுடன் ..... விருந்தல் கலந்துகொண்டோம் (தேனீர் / தேநீர்)
2. மழை பெய்ததால் ..... ஏற்பட்டது (வெல்லம் / வெள்ளம்)
3. எனக்கு தலை .....யாக இருந்தது (வலி / வழி)
4. காலைவேளையில் .....யாக இருந்தது (பனி / பணி)
5. அண்ணா ..... மாதத்தில் பிறந்தான் (ஆனி / ஆணி)

08. **"எனது பாடசாலை"** என்ற தலைப்பில் சரியான எழுவாய் பயனிலை புலப்படும் வகையில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாதவாறு அமைத்தல் வேண்டும். (எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது)

1) ……..

……..

2) ……..

……..


3) ……..

……..

09. தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.

1) **8790** என்ற இலக்கத்தை சொற்களில் எழுதுக.

……....

2) 

இப்பெட்டியினுள் காணப்படும் பென்சில்களின் எண்ணிக்கையை உரோம எண்ணில் தருக.

……..……

3) பாடசாலை ஆரம்பித்த நேரம் மு.ப 7.30 மணியாகும். எனினும் நாதிரா பாடசாலை ஆரம்பித்து 40 நிமிடங்களின் பின்பே பாடசாலைக்கச் சமூகமளித்தாள். அதன்படி நாதிரா பாடசாலைக்கு சமூகமளித்த நேரம் யாது ?

……....

www.lkedu.lk

4) A எனும் தோட்டத்தில் இருந்து பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை 3670 ஆகும். B எனும் தோட்டத்தில் இருந்து பறித்த தேங்காய்களின் எண்ணிக்கை 3440 ஆகும். எனில், இரு தோட்டங்களிலும் பறித்த தேங்காய்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

.....

5) 

இவ்வுருவில் காணப்படுகின்ற செங்கோணங்களின் எண்ணிக்கை யாது ?

.....

6) ஒரு முட்டையின் விலை ரூபா 18.00 எனின், ரூபா 108.00 க்கு எத்தனை முட்டைகள் வாங்க முடியும் ?

.....

7) 3 லீற்றர் கொள்ளக்கூடிய போத்தலை 200 மில்லி லீற்றர் கோப்பையினால் எத்தனை முறை ஊற்றி நிரப்ப முடியும் ?

.....

8) இவ்வுருவின் சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.



9) தற்போது இலங்கையில் புழக்கத்தில் உள்ள மிகப் பெறுமதி கூடிய நாணயத்தாள் எது?

.....

10) கூட்டுக.

15kg 350g
20kg 550g

11) மாணவன் ஒருவன் பாடசாலையில் இருந்து 8m வடக்கே சென்று பிரதான வீதியை அடைந்தான். பின் அங்கிருந்து 14m மேற்கே சென்று தனது வீட்டை அடைந்தான். பாடசாலைக்கு எத்திசையில் வீடு அமைந்துள்ளது ?

.....


12) 

இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னத்தில் தருக.

.....

www.lkedu.lk

- **வாரம் ஒன்றின் முதல் நான்கு நாட்களுள் பாடசாலைக்கு வந்த தரம் 5 மாணவர்களின் வரவு வரைபில் காட்டப்பட்டுள்ளது.**



13) வெள்ளிக்கிழமைக்கான வரவு 50 எனின், அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

14) மிகக்கூடிய வரவிற்கும் மிகக் குறைந்த வரவிற்கும் இடையேயுள்ள வித்தியாசம் எவ்வளவு?

……..…

15) பாடசாலைக்கு மாணவர்கள் சமமாக வருகை தந்த தினங்கள் எவை ?

……..…

www.lkedu.lk

10. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. இறைச்சியை மாத்திரம் உண்ணும் விலங்கினம்
   1) ஒட்டகம் 2) ஒநாய் 3) பூனை 4) எலி

2. 

அருகில் தரப்பட்ட உலர் உணவு பைக்கற்றை கொள்வனவு செய்யும் போது கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் எது ?
   1) காலாவதியாகும் திகதி
   2) உற்பத்தித் திகதி
   3) பொருளின் நிறை
   4) பொருளின் விலை


3. உரோமங்களால் உடல் மூடப்பட்டுள்ள விலங்கினம் அல்லாதது
   1) அணில் 2) குரங்கு 3) பாம்பு 4) முயல்

4. பத்துக் கால்கள் கொண்ட பிராணிகள்
   1) இறால், நண்டு 2) கரப்பான், எறும்பு
   3) தேனீ, வெட்டுக்கிளி 4) சிலந்தி, பூரான்

5. 
உருவில் உள்ள இலச்சினை குறிப்பது
   1) ஸ்ரீலங்கா டெலிகொம்
   2) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
   3) இலங்கைக் கட்டளைகள் பணியகம்
   4) தொல்பொருள் திணைக்களம்

6. சூரியனுக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கோளையும் புவிக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கோளையும் முறையே காட்டும் விடை
   1) புதன், சுக்கிரன் 2) புதன், வியாழன்
   3) வியாழன், சனி 4) சனி, சுக்கிரன்

7. நீருடன் நன்கு கலக்கக்கூடிய திரவம்
   1) மண்ணெண்ணெய் 2) பெற்றோள் 3) வினாகிரி 4) தேங்காய்யெண்ணெய்

8. வீட்டில் மின் விளக்கிற்கு அருகில் காணக்கூடிய பிராணி
   1)  2)  3)  4) 

9. மஞ்சள் நிறப் பூ வகை
   1) கொன்றை 2) மல்லிகை 3) கத்தரி 4) மிளகாய்

10. முட்டையிட்டு இனம் பெருக்கும் பிராணி அல்லாதது

1) 
2) 
3) 

4) 

11. கண்கள், காதுகள் இரண்டையும் பயன்படுத்தித் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்,
1) ஒலிபெருக்கி 2) தொலைக்காட்சி
3) சுவரொட்டி 4) செய்திப்பத்திரிகை

12. வாழைப் பூவை நாடி வரும் பிராணி
1) தேன்சிட்டு 2) ஆந்தை 3) முயல் 4) அணில்

13. மாலை வேளையில் பூக்கும் பூக்கள் எது ?
1) கடும்புல் 2) தாமரை 3) அந்திமந்தாரை 4) செவ்வரத்தை

14. பின்வருவனவற்றுள் தனது வாழ்விடமாக புற்றை அமைக்கும் பிராணி
1) பாம்பு 2) கறையான் 3) தேனீ 4) மண்புழு

15. எதிரியிடமிருந்து தப்பிப்பதற்காக தனது உடலை கித்துள் வித்துப் போல மாற்றும் பிராணி யாது ?
1) ஆமட்டில்லா 2) மரவட்டை 3) அட்டை 4) ஆமை


16. 

அருகில் தரப்பட்டுள்ள விளையாட்டை விளையாடுவதற்கு ஒரு அணியில் பங்கு கொள்ளும் வீரர்களின் எண்ணிக்கை
1) 10
2) 11
3) 16
4) 6

17. பாரமான உணவையும் எடுத்துச்செல்லும் பிராணி
1) ஈ 2) தேனீ 3) எறும்பு 4) குளவி

18. இலங்கையிலுள்ள மாகாணங்களின் எண்ணிக்கை
1) 9 2) 8 3) 25 4) 12

19. வாகனமொன்றிற்கு எரிபொருள் நிரப்புவதற்குச் செல்ல வேண்டிய இடத்தைக் காட்டும் குறியீடு

1) 
2) 
3) 
4) 

www.ikedu.lk

20. மேல் மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்டம்
1) குருநாகல் 2) இரத்தினபுரி 3) கண்டி 4) கொழும்பு

21. இடத்திற்கு இடம் உடலை மாற்றிக் கொள்ளும் பிராணி
1) கிளி 2) மான் 3) முயல் 4) பச்சோந்தி

22. சிறிய ஒலிகளைக் கேட்கும் தன்மையுள்ள பிராணி
1) முயல் 2) யானை 3) கிளி 4) ஆந்தை

23. நீரை உறிஞ்சிக் குடிக்கும் பறவை
1) பருந்து 2) கிளி 3) புறா 4) மைனா

24. நான்கு பக்கமும் நீரினால் சூழப்பட்ட இடத்தை எவ்வாறு அழைப்பர் ?
1) குடா 2) ஏரி 3) தீவு 4) களப்பு

25. இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள நாடு
1) லண்டன் 2) அமெரிக்கா 3) கனடா 4) இலங்கை



26. இலங்கைக்கு அருகே அமைந்துள்ள நாடு
1) பூட்டான் 2) லண்டன் 3) அமெரிக்கா 4) பிரான்ஸ்

27. இலங்கைக்கு வடக்கே அமைந்துள்ள நாடு
1) பங்களாதேஸ் 2) பாகிஸ்தான் 3) இந்தியா 4) நேபாளம்

28. புத்தகங்களைச் சேதப்படுத்தும் பிராணி அல்லாதது
1) இராமபாணம் 2) எலி 3) கறையான் 4) சில்வண்டு

29. உலக புத்தக தினம் கொண்டாடப்படுவது,
1) ஏப்ரல் 23 2) ஏப்ரல் 14 3) ஏப்ரல் 15 4) ஏப்ரல் 25

30. காதுகளினூடாகத் தகவல்களைப் பெறத்தக்க ஊடகம்

1) 
2) 
3) 

4) 

www.lkedu.lk

புலமை அறிவு



தரம் 5

2020 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 06

ஆசிரியர்

திரு. ந. மனோகரன் BA, Dip in Teach , SLTS II

(புலமை அறிவு வினாத்தாள் ஆசிரியர் -
(புலமைச் சுடர், மலைமுரசு, ஒளி அரசு புலமைப் பரிசில்,
கிழக்கு மாகாணம் - வினாத்தாள் ஆசிரியர்)

தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)



மாணவர் பெயர்


.....

புள்ளித்திட்டம்	
பகுதி I	
பகுதி II	
மொத்தம்	


www.

பகுதி I


- **01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து ஒத்த தொடர்புகளைக் காட்டும் உருக்களைத் தெரிவு செய்க.**



A



B



C



D



E



F

01. போக்குவரத்துச் சாதனங்கள் முறையே

1) Aயும் Bயும் Dயும் 2) Bயும் Dயும் Fயும் 3) Cயும் Dயும் Eயும்

02. காற்றினால் இயங்கக்கூடியது முறையே

1) Aயும் Bயும் 2) Bயும் Eயும் 3) Cயும் Dயும்

- **கீழே தரப்பட்டுள்ள உருக்களை அவதானித்து 3 ஆம் 4 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




A



B



C



D



E

03. நீரில் மட்டும் வாழக்கூடிய பிராணிகள்?

1) B , C 2) A , D 3) E , D

04. பாம்பு உண்ணும் உணவையும் கொக்கு உண்ணாத உணவையும் முறையே காட்டுவது

1) B , A 2) E, D 3) E , B

www.lkedu.lk

- **தரப்பட்டுள்ள பாடல் அடிகளில் இடைவெளிக்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

கடலிற் பொங்கும் திரையைப் பார்
காற்றில் ..... நுரையைப் பார்
அலைகள் மோதும் கரையைப் பார்

05. 1) பறக்கும் 2) மிதக்கும் 3) சிதறும்

06. 6m தூரத்திற்கு சீரான இடைவெளியில் நடுவதற்கு 7 கம்புகள் தேவை. 18m தூரத்திற்கு அதே சீரான இடைவெளியில் கம்பு நடுவதற்கு எத்தனை கம்புகள் தேவை ?
1) 21 கம்புகள் 2) 18 கம்புகள் 3) 19 கம்புகள்

07. சுதன் காலையில் வடக்கிலுள்ள பாடசாலை செல்லும் போது அவனது நிழல் விழும் பக்கம் எது ?
1) வலது 2) இடது 3) முன்

08. தந்தையின் வயது எனது வயதின் நான்கு மடங்காகும். இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை 55 எனின், எனது வயது யாது ?
1) 11 வயது 2) 12 வயது 3) 44 வயது

09. ஆறு பேர் தங்களுக்குள் கை குலுக்கினர் எனின், எத்தனை கைகுலுக்கல் இடம்பெற்றிருக்கும் ?
1) 12 2) 30 3) 15

10. "வருமானம்" என்ற சொல் 21364 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவே "வருடம்" என்ற சொல் குறிப்பது ?
1) 2196 2) 2164 3) 2184


11. 2016 ஆம் ஆண்டு ஒரு நெட்டாண்டாகும். 29 நாட்களைக் கொண்ட பெப்ரவரி மாதம் பின்வரும் எந்த ஆண்டுகளில் வரும் ?
1) 2019 உம் 2023 உம் 2) 2020 உம் 2024 உம் 3) 2021 உம் 2025 உம்

12. "விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்பதன் கருத்து
1) பேரியவர்களாக வளர சிறியவர்களுக்கு உதவ வேண்டும்
2) பயிர் நன்றாக வளர சிறந்த விதை தேவை
3) ஒருவரின் சிறு வயதுப் பழக்கங்களை வைத்து அவரைப்பற்றி மதிப்பிடலாம்

13. சிலர் வறுமையடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்ய மாட்டார்கள் என்பதைக் குறிக்கும் பழமொழி
1) துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்
2) புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது
3) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

www.lkedu.lk

கீழ்வரும் உருக்களை அவதானித்து 14, 15, 16ஆம் வினாக்களுக்கு சரியான விடையின் கீழ்க் கோடிடுக.




14. அப்பிள் பழமொன்றின் விலை யாது ?
    1) ரூபாய் 15.00 2) ரூபாய் 25.00 3) ரூபாய் 20.00

15. மாம்பழமொன்றின் விலை யாது ?
    1) ரூபாய் 15.00 2) ரூபாய் 70.00 3) ரூபாய் 25.00

16. பப்பாசிப் பழமொன்றின் விலை யாது ?
    1) ரூபாய் 55.00 2) ரூபாய் 45.00 3) ரூபாய் 40.00

17. கவிதா புகைப்படம் ஒன்றைப் பார்த்து இவ்வாறு கூறினாள்.
    "இப்புகைப்படத்தில் இருப்பவர் எனது தந்தையின் மகனாகும்." அதன்படி, அப்புகைப்படத்தில் இருப்பவர் கவிதாவின்,
    1) தந்தை 2) மாமா 3) சகோதரன்

18. 

சதுர வடிவான காணி ஒன்றைச் சுற்றி 16 வேலித்தூண்கள் நாட்டப்பட்டிருந்தன. இச் சதுரவரடிவக் காணியை அம்புக்குறியினால் காட்டப்படும் யாதாயினும் ஒரு திசைவழியே பார்க்கும் போது அப்பக்கத்தில் தெரியும் வேலிக்கம்பங்களின் எண்ணிக்கை எத்தனை ?
    1) 4
    2) 5
    3) 6

19. உறையொன்றில் மஞ்சள் நிறப்பந்து ஒன்றும் பச்சை நிறப்பந்துகள் 12 உம் உள்ளன. இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு கையை உறையினுள் இட்டு பந்து ஒன்றை வெளியே எடுத்தால் நிச்சயமாகக் கிடைப்பது.
    1) மஞ்சள் நிறப்பந்து ஒன்றாகும்
    2) பச்சை நிறப்பந்து ஒன்றாகும்.
    3) பந்து ஒன்றாகும்

www.lkedu.lk

20. $3 \times \bigcirc = \square$ $\qquad$ $\square \times \square = \triangle$


இங்கு உரு $\triangle$ யின் பெறுமானம் யாது ?

1) 6 2) 49 3) 81

21. நேற்று சனிக்கிழமை எனின், நாளை மறு நாள் என்ன கிழமை ?

1) ஞாயிறு 2) புதன் 3) செவ்வாய்

22. அருகில் உள்ளது சமபக்க முக்கோண வடிவில் அமைந்த பூப்பாத்தியாகும். ஆப்பூப்பாத்தியில் உள்ள தூண்களின் மொத்த எண்ணிக்கை 33 எனின், ஒரு பக்கத்திலிருந்து பார்க்கும் போது தெரியும் தூண்கள் எத்தனை ?



1) 10
2) 11
3) 12

23. 90 தொடக்கம் 99 வரையுள்ள எண்ணும் எண்களை எழுதும் போது இலக்கம் 9 எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை ?

1) 10 2) 12 3) 11

24. ஜனவரி மாதம் 1 ஆம் திகதி புதன்கிழமை எனின், ஜனவரி மாதம் 9 ஆந்திகதி என்ன கிழமை ?

1) புதன்கிழமை 2) வியாழக்கிழமை 3) வெள்ளிக்கிழமை

25. 

இவ்வுருவில் காணக்கிடைக்கும் செவ்வகங்களின் எண்ணிக்கை

1) 3
2) 5
3) 6

26. இரண்டு தூண்களுக்கிடையிலான தூரம் 3m ஆகும். சமதூர இடைவெளியில் நடப்பட்ட ஆறு தூண்களுக்கிடையிலான தூரம் யாது ?

1) 12m 2) 10m 3) 15m

27. பாடசாலை ஒன்றில் எப்போதும் இருப்பது

1) கட்டடமும் மாணவர்களும்
2) ஆசிரியர்களும் மாணவர்களும்
3) கட்டடமும் தளபாடமும்

www.lkedu.lk

28. ஓர் இலக்கத்தை அதே இலக்கத்தினால் பெருக்கினால் விடை 36 ஆகும். அவ்விலக்கம் யாது ?
    1) 5 2) 6 3) 7


29. வரிசையொன்றில் சுரேஸ் நின்று கொண்டிருப்பது வரிசையின் சரி நடுவே ஆகும். சுரேஸிற்குப் பின்னால் நின்று கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கை 07 எனின், வரிசையில் நின்று கொண்டிருப்பவர்களின் மொத்த எண்ணிக்கை ?
    1) 8 2) 14 3) 15

30. என்னிடம் ஒரேயளவான நீளமுள்ள 27 ஈர்க்குத் துண்டுகள் இருந்தன. அதில் நான் ஒரு சதுரமுகியும் ஒரு கனவுருவையும் செய்தேன். அதன்படி என்னிடம் மீதியாகவுள்ள ஈர்க்குத் துண்டுகளின் எண்ணிக்கை யாது ?
    1) 5 2) 4 3) 3

31. "கடுகு சிறிதானாலும் காரம் பெரிது" எனும் பழமொழி உணர்த்துவது
    1) கடுகின் சிறப்பை
    2) சிறியதன் சிறப்பை
    3) பெரியதன் சிறப்பை

32. "வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்" என்ற கருத்தைத் தரும் பழமொழி
    1) பசி வந்தால் பத்தும் பறக்கும்
    2) நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
    3) இரக்கப் போனாலும் சிறக்கப் போ

33.



வெற்றிடத்தில் வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.

1) 17
2) 54
3) 72

34. இரண்டு ஒற்றையெண்களை கூட்டும் போது
    1) ஓர் ஒற்றையெண் கிடைக்கும்
    2) ஓர் இரட்டையெண் கிடைக்கும்
    3) ஓர் ஒற்றையெண் அல்லது இரட்டையெண் கிடைக்கும்

35. அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சை ஒன்று புதன்கிழமை ஆரம்பித்து சனிக்கிழமை முடிவடைந்தது எனின், பரீட்சை நடைபெற்ற நாட்கள் எத்தனை ?
    1) 3 நாட்கள் 2) 4 நாட்கள் 3) 5 நாட்கள்

www.lkedu.lk


- **பின்வரும் பாடலைப் படித்து தரப்பட்ட வினாக்களுக்கு விடை தருக.**

ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா

36. இப்பாடலின் மூலம் உணர்த்தப்படுவது,
1) உதிரம் வெவ்வேறானது என்பதனை
2) கண்ணீர் வெவ்வேறானது என்பதனை
3) சாதி என்பதே இல்லை என்பதனை


37. இங்கு சாதி எனக் குறிப்பிடப்படுவது
1) இனம் 2) குலம் 3) மதம்

38.



இவ்வுருவில் செவ்வகம், முக்கோணம், வட்டம் ஆகிய மூன்று வடிவங்களுக்கும் பொதுவான இலக்கம்
1) 4
2) 6
3) 3

39.



இச் செங்கல் குவியலில் எத்தனை செங்கற்கள் இருக்கின்றன?
1) 27
2) 28
3) 29

40. பெரும்பாலானோர் தினமும் பத்திரிகைகள் வாசிப்பது
1) நாட்டின் புதிய தகவல்களை அறிவதற்காகும்
2) அறிவை விருத்தி செய்து கொள்வதற்காகும்
3) விளம்பரங்களைப் பார்ப்பதற்காகும்

www.lkedu.lk

செய்கை வேலைக்கான பகுதி

www.lkedu.lk

01. பந்தியை வாசித்து விடை தருக.

சந்திரன் அழகானது. சந்திரனை நிலா, அம்புலி, நிலவு, மதி எனவும் அழைப்பதுண்டு. பல புலவர்கள் சந்திரனை வர்ணித்துப் பாடல்கள் பாடியுள்ளார்கள். கவிதைகள் இயற்றியுள்ளார்கள். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் சந்திரோதயத்தை எவ்வாறு வர்ணிக்கின்றார் எனப் பார்ப்போம்.

1. பந்தியில் கூறப்பட்டுள்ள வான் பொருள் எது? .....
2. சந்திரனுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை? .....
3. கவிஞர்கள் என்பதற்குரிய ஒத்த சொல்? .....
4. வனப்பானது என்பதன் ஒத்த சொல்? .....
5. திங்கள் என்பதன் ஒத்த சொல்? .....
6. செய்யுள்கள் என்பதன் ஒத்த சொல்? .....
7. உயர்திணை படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல்? .....
8. அவர் என்பதன் பன்மை வடிவம்? .....
9. சொற்களை சேர்த்தெழுதுக : பாடி + உள்ளார்கள் .....
10. நிலவின் எழுச்சியை எவ்வாறு அழைப்பர்? .....
11. சொற்களை பிரித்தெழுதுக சந்திரோதயம் ..... + ...

02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. தோமஸ் அல்வா எடிசன் "மின்குமிழ்" பற்றிய .....யில் ஈடுபட்டார் (ஆராய்ச்சி / ஆராச்சி)
2. இலங்கையிலே பெரிய ஆறு மகாவலி கங்கை அதன் .....யில் ஒரு சிறு குடிசை உண்டு. (கறை / கரை)

03. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

1. I am very happy : .....
2. Happy birthday : .....

04. சிங்கள வாக்கியத்தின் கருத்தினை தமிழில் எழுதுக.

1. மாமா எனவா : .....
2. அம்மா உயல இவறத ? : .....

www.lkedu.lk

05. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் அறிவித்தல்களா? அறிவுறுத்தல்களா? கட்டளைகளா? எனத் தெரிந்து அடைப்பினுள் எழுதுவோம்.

1. மின்சாரத்தை வீண் விரயம் செய்ய வேண்டாம் (.....)

2. அடுத்த திங்கள்கிழமை (18.02.2020) மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணிவரையில் எமது பாடசாலையில் சிரமதான நிகழ்வு நடைபெறும் (.....)

3. விளாத்தாளில் எல்லாப்பக்கங்களிலும் உங்களது சுட்டெண்ணைச் சரியாக எழுதுக (.....)

4. நாளை சகல மாணவர்களுக்கும் இலவச பாடநூல்கள் வழங்கப்படும். எனவே மாணவர்கள் அனைவரும் தம்மிடமுள்ள பாடநூல்களை மறக்காமல் கொண்டு வரவும் (.....)

5. சிவப்பு நிறப் பந்தை எடுங்கள் (.....)

06. கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

i) கைதிகளை தடுத்து வைத்திருக்கும் இடம் : .....

ii) நாட்டிற்கு விரோதமாக நடத்தல் : .....

iii) பொருள் ஒன்றுடன் வேறு ஒரு பொருளைக் கலந்து விடுதல் : .....

iv) கல்வித் துறையில் பல மேற்படிப்புப் பயிலும் இடம் : .....

v) வழக்கை தாக்கல் செய்பவன் : .....

வாதி, பல்கலைக்கழகம், தேசத்துரோகம், கலப்படம், சிறைச்சாலை

07. கீழே தரப்பட்டவற்றுக்கு அடைப்புக்குள்ளிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

உங்கள்	நாங்கள்	எங்கள்	நீங்கள்	புறப்படும்

i) தன்மை .....

ii) முன்னிலை .....

iii) படர்க்கை .....

08. தரப்பட்ட படங்களுக்குரிய பெயரின் ஆங்கில உச்சரிப்பை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.





....

www.lkedu.lk

09. "நாம் சென்ற கல்விச் சுற்றுலா" என்ற தலைப்பில் சரியான எழுவாய் பயனிலை புலப்படும் வகையில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாதவாறு அமைத்தல் வேண்டும். (எழுத்துப் பிழைகள் இருப்பின் புள்ளி வழங்கப்படமாட்டாது)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

- **தரப்பட்ட வெற்றிடத்தில் விடையை எழுதுக.**


1) சொற்களில் எழுதுக.
4026 : .....

2) சதுரத்திலுள்ள இலக்கங்களைப் பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக.
.....

9	2
7	4

3) தரப்பட்ட உரோம எண்ணில் முந்திய எண்ணையும் பிந்திய எண்ணையும் தருக.

.....IX .....


4) 

பெட்டிக்குள் உள்ள பந்துகளின் எண்ணிக்கையை உரோம எண்ணில் எழுதுக.


.....

www.lkedu.lk

5) எண்கோலத்தை அவதானித்து இடைவெளிகளை நிரப்புக.




6)



இக்கடிகார முகம் காட்டும் நேரம் யாது?

.....

7) உருவில் நிழற்றிய பகுதியைப் பின்னமாக எழுதுக.



.....

8) இவற்றுள் 7 இன் மடங்குகளை ஏறுவரிசையில் எழுதுக.


7, 23, 21 , 16, 42, 14, 18, 28, 35, 19, 38

.....

9) மு.ப 7.15 க்குப் புறப்பட்ட பேருந்து 45 நிமிடங்கள் பயணம் செய்து பயணத்தை நிறைவு செய்தது எனின், பயணத்தை நிறைவு செய்த நேரம் யாது ?

.....

10)



பென்சிலின் நீளத்தை சென்ரிமீற்றரில் தருக. .....

www.lkedu.lk


11) பாத்திரம் ஒன்றில் $3l\ 250ml$ குளிர்பானம் உள்ளது மேலும் $2l\ 825ml$ சேர்க்கப்பட்டால் தற்போதுள்ள குளிர்பானத்தின் அளவு யாது ?

.....

12) கூட்டுக

	4 Kg	450 g
+	3 Kg	230 g

13)




i) அருகில் உள்ள உருளையின் வட்ட முகங்களின் எண்ணிக்கை யாது ?

.....

ii) அதன் வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது ?

.....

14)



A, B ஆகிய இருபாத்திரங்களிலும் உள்ள நீரின் மொத்த கனவளவு?

.....

15) 1Kg தேயிலையின் விலை ரூ. 280.00 எனின்,

i. 250g தேயிலையின் விலை யாது?


.....

ii. ரூ. 70.00இற்கு வாங்கக்கூடிய தேயிலையின் அளவு யாது?

.....

www.lkedu.lk

- **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. கறுப்பு நிற முட்டையிடும் பிராணி
   1)  2)  3)  4) 

2. உப்புக்கட்டிகளை நெருப்பில் போட்டவுடன் நிகழ்வது
   1) உப்புக் கட்டிகள் வெடிக்கும்
   2) உப்புக் கட்டிகள் கரையும்
   3) உப்புக் கட்டிகள் ஆவியாகும்
   4) மேற்கூறிய சகல விடைகளும் பிழையானவை

3. குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பிராணி,
   1) யானை 2) நாய் 3) சிங்கம் 4) ஒட்டகம்

4. கால்கள் மூலம் இரையைப் பற்றிப் பிடிக்கும் பறவை
   1)  2)  3)  4) 

5. இலங்கையில் அமைந்துள்ள நீர்வீழ்ச்சியல்லாதது,
   1) துன்ஹிந்த 2) பம்பரகந்த 3) மகாவலி 4) தியலும

6. தேசியக் கொடியில் காணக்கிடைக்கும் வர்ணம் அல்லாதது
   1) பச்சை 2) மஞ்சள் 3) செம்மஞ்சள் 4) கறுப்பு

7. உணவாக சமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பூ வகை,
   1) தொட்டாற்சுருங்கி 2) நாக மலர் 3) அகத்தி 4) முள்முருக்கு

8. குயில் முட்டையிடுவது
   1) பருந்தின் கூட்டில்
   2) காகத்தின் கூட்டில்
   3) மரங்கொத்தியின் கூட்டில்
   4) கிளியின் கூட்டில்

9. புளிப்புச்சுவை கொண்ட பழங்களில் அதிகமாக இருப்பது,
   1) விற்றமின் A 2) விற்றமின் D 3) விற்றமின் B 4) விற்றமின் C

10. பத்திரிகை ஒன்றிலுள்ள சிறிய எழுத்துக்களைப் பெரிதாக்கிப் பார்க்க உதவுவது
    1) கைவில்லையினால்
    2) தொலைநோக்கியினால்
    3) நுணுக்குக்காட் டியினால்
    4) முகம் பார்க்கும் கண்ணாடியினால்

www.lkedu.lk

11. அதிக கால்களைக் கொண்ட பிராணி
1) மண்புழு 2) நத்தை 3) அட்டை 4) மரவட்டை

12. இத்தாவரத்தை எரித்துப் புகையூட்டுவதன் மூலம் நுளம்புகளை விரட்டலாம். அத்தாவரம்
1) துளசி 2) மரமஞ்சள் 3) திப்பிலி 4) வட்டக்கண்ணி

13. விசர்நாய்க்கடி நோயைப் பரப்பாத பிராணி
1) நாய்களினால் 2) பூனைகளினால்
3) கரப்பான்பூச்சியினால் 4) குரங்குகளினால்

14. அரச இலட்சனையில் "சௌபாக்கியத்தைக்" காட்டுவது,




1) நெற்கதிர்கள்
2) நிறைகுடம்
3) சூரியன், சந்திரன்
4) தர்மச்சக்கரம்

15. இலங்கை அமைந்துள்ளது இந்தியாவிற்கு,
1) தெற்கில் 2) வடக்கில் 3) மேற்கில் 4) கிழக்கில்

16. கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள நகரம்
1) திருகோணமலை 2) புத்தளம் 3) காலி 4) கண்டி

17.




இப்பொலிஸ் அதிகாரி வழங்கும் சமிக்ஞையினால் கருதப்படுவது,
1) முன்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.
2) முன்னாலும் பின்னாலும் வரும் வாகனங்கள் நிறுத்துக.
3) பின்னால் வரும் வாகனங்கள் நிறுத்துக.
4) பின்னால் வரும் வாகனங்கள் முன்னால் செல்க

18. சித்திரை மாதத்தில் அதிகமாக ஒலி எழுப்பும் பறவை
1) ஆந்தை 2) வெளவால் 3) கிளி 4) குயில்

19. வானவில் காலையில் தோன்றும் திசை
1) கிழக்கு 2) மேற்கு 3) தெற்கு 4) வடக்கு

20.



இவ்வுபகரணம் பயன்படுத்தும் தொழிலாளி
1) மேசன்
2) தச்சன்
3) நெசவுத் தொழிலாளி
4) கொல்லன்

www.tkedu.lk



21. ஒலிம்பிக் கொடியிலுள்ள நிறம் அல்லாதது
1) நீலம் 2) மஞ்சள் 3) சிவப்பு 4) ஊதா

22. இரவு வேளையில் மாத்திரம் பார்வைத்திறன் கொண்ட பிராணி
1)  2)  3)  4) 

23. மட்பாண்ட உற்பத்தியில் பயன்படுத்தப்படுவது,
1) செக்கு 2) மடைக்கதவு 3) வனைசில்லு 4) மணியாசு


24. தற்போது இலங்கையில் புழக்கத்திலுள்ள காசுத்தாள்களில் பெறுமதியில் கூடிய காசுத்தாள்,
1) ரூபா 2000.00 2) ரூபா 1000.00 3) ரூபா 10,000.00 4) ரூபா 5000.00

25. நான்கு சோடிக் கால்களையுடைய ஒரு பிராணி
1) தேள் 2) நண்டு 3) வீட்டு ஈ 4) நுளம்பு

26. மூளை வளர்ச்சி கூடிய பிராணி
1)  2)  3)  4) 

27. நண்பகல் வேளையில் பூக்கும் தாவரம் ?
1) கொடித்தோடை 2) திப்பிலி 3) மிளகு 4) கடுபுல்


28. வானவில் ஒன்றில் காணப்படும் நிறமல்லாதது
1) செம்மஞ்சள் 2) சிவப்பு 3) ஊதா 4) வெள்ளை

29. தனது கழிவுகளை குழி தோண்டி புதைக்கும் பிராணி
1)  2)  3)  4) 

30. ஒளியின் பயணத்தைத் தடுக்க முடியாத பொருள் எது ?
1) பலகை 2) கண்ணாடி 3) செங்கல் 4) இரும்புத் தகடு

www.lkedu.lk

புலமை அறிவு



தரம் 5

2020 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை 08

ஆசிரியர்

திரு. ந. மனோகரன் BA, Dip in Teach , SLTS II

(புலமை அறிவு வினாத்தாள் ஆசிரியர் -
(புலமைச் சுடர், மலைமுரசு, ஒளி அரசு புலமைப் பரிசில்,
கிழக்கு மாகாணம் - வினாத்தாள் ஆசிரியர்)

தி/ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)



மாணவர் பெயர்

.....

புள்ளித்திட்டம்	
பகுதி I	
பகுதி II	
மொத்தம்	

www.

பகுதி I

- **01ஆம், 02ஆம் வினாக்களில் தரப்படும் சொற்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.**

01. கடல் - காற்று - ஓசை - துளை - இயற்கை



1)



2)



3)

02. அழகு - நிறம் - மணம் - உணவு - மஞ்சள்



1)




2)



3)

03.




இவ்வுருவின்படி ஒரு விளையாட்டை மட்டும் விரும்புவோர் எத்தனை பேர் இருக்கின்றனர் ?

1) 03
2) 12
3) 09

04. முழு உருவின் பரப்பளவு நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவைப் போல்,

1) மூன்று மடங்காகும்.
2) நான்கு மடங்காகும்
3) இரண்டு மடங்காகும்



05. அண்ணன் சிவப்பு நிறத்திற்கும் மஞ்சள் நிறத்திற்கும் விருப்பமுடையதுடன் பச்சை நிறத்திற்கு விருப்பமில்லை. தம்பி பச்சை நிறத்திற்கும் சிவப்பு நிறத்திற்கும் விருப்பம் எனினும் மஞ்சள் நிறத்திற்கு விருப்பமில்லை. நான் நீல நிறத்தையும் பச்சை நிறத்தையும் தவிர ஏனைய சகல நிறங்களையும் விரும்புவேன். அதன்படி, மூவரும் விருப்பமுடைய நிறம்,




1) சிவப்பு நிறம் 2) பச்சை நிறம் 3) மஞ்சள் நிறம்

www.lkedu.lk


06. ஒரு முறை கொண்டு செல்லும் போது 3 பெட்டிகள் வீதம் கொண்டு சென்றால் இரண்டு டசின் பெட்டிகளை எத்தனை தடவையில் கொண்டு செல்ல முடியும்.
1) 8 தடவை 2) 9 தடவை 3) 7 தடவை


07. 8 நண்பர்கள் விழா ஒன்றில் சந்தித்து தம்மிடையே கைகுலுக்கிக் கொண்டனர். எனின், அங்கு இடம்பெற்ற கைகுலுக்கல்கள் எத்தனை ?
1) 64 2) 56 3) 28


08. நிமிடத்திற்கு 50m எனும் வேகத்தில் நடக்கும் ஒருவர் குறித்த ஓர் சதுரவடிவ பூம்பாத்தியை சுற்றிவர 8 நிமிடங்கள் தேவைப்பட்டது எனின், அப்பூம்பாத்தியின் ஒருபக்க நீளம் யாது ?
1) 150m 2) 100m 3) 75m

09. நான்முகியை அமைக்கக்கூடிய உருவைத் தெரிவு செய்க.
1) 
2) 
3) 


- **கூட்டினுள் தரப்பட்ட பழங்களின் விலையினை அவதானித்து தனித்தனியே பழங்களின் விலையைக் காண்க.**


ரூபா 30.00


ரூபா 35.00


ரூபா 95.00

10. தோடம்பழம் ஒன்றின் விலை யாது ?
1) ரூபா 50.00 2) ரூபா 60.00 3) ரூபா 80.00

11. 

இச்சதுரமுகியின் முகங்களில் 1 தொடக்கம் 6 வரையான இலக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. சகல எதிர் முகச்சோடிகளினதும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 7 ஆகும். அதன்படி A முகத்தினதும் அதற்கு எதிர் முகத்தினதும் இலக்கங்களாக இருக்கக்கூடியது,

1) 3 , 4 2) 2 , 5 3) 7 , 0

www.lkedu.lk

12. D, B , X , V ஆகிய எழுத்துக்களை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாற்றம் எதுவும் காணப்படாத எழுத்துக்கூட்டம் எவை ?


